<table>
<tr><td colspan="2">DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai</td></tr>
<tr><td colspan="2">Date: 27.02.2026</td></tr>
<tr><td colspan="2">STC No. 1069/2023</td></tr>
<tr><td colspan="2">சாட்சி : RW2</td></tr>
<tr><td>பெயர் : திருமதி. சசிகலா</td><td>ஜாதி :</td></tr>
<tr><td>த/பெ/க/பெ. : திரு. ராஜரெத்தினம்</td><td>தொழில் :</td></tr>
<tr><td>கிராமம் : வையம்பட்டி</td><td>சமயம் :</td></tr>
<tr><td>தாலுக்கா :</td><td>வயது : 52/2026</td></tr>
<tr><td colspan="2">( வழக்கறிஞர் ஆஜர்)</td></tr>
</table>

---

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது வையம்பட்டியில் வசித்து வருகிறேன். புகார்தாரர் எனக்கு என்ன உறவு என்றால் எனது கணவர். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் Gujarat Heavy Chemicals Ltd., Employees Cooperative thrift and Credit Society ல் செயலாளராக வேலை பார்த்து வருகிறேன். எனது கணவருக்கும், எனக்கும் ஜாயின்ட் அக்கவுண்ட் உள்ளதா என்றால் உள்ளது. எந்த வங்கியில் உள்ளது என்றால் கனரா வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உள்ளது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கியின் அக்கவுண்ட் நம்பர் ஞாபகமுள்ளதா என்றால் இல்லை. கனரா வங்கி அக்கவுண்ட் எண். 479410101199 என்றால் சரிதான். இரண்டு அக்கவுண்டையும் நாங்கள் இருவரும் சேர்ந்து தான் உபயோகித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கை யார் மீது எனது கணவர் தொடுத்துள்ளார் என்றால் எதிரி நாகராஜ் மீது தொடுத்த விபரம் எனக்கு தெரியும். 01.01.2022 முதல் 31.12.2022 வரையில் எனது ஜாயின்ட் அக்கவுண்டுக்கு பணத்தை அனுப்பிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்னிடம் தான் கைமாற்று கடன் வாங்கினார் என்றும், அதை திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் அதற்காக எதிரி என்னிடம் வழக்கு காசோலை கொடுத்திருந்தார் என்றும் என்னிடம் வாங்கிய

ரூ.50,000/- த்தை திருப்பி கொடுத்திவிட்டு இந்த வழக்கு காசோலை கேட்டதற்கு நான் கூடுதல் தொகை கேட்டு காசோலையை கொடுக்கலாம் எனது கணவர் மூலமாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.